# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 18.10. 2021 | **1)** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற் பொறியாளரின் கடிதம் எண். **0910**/F.TCN Added & Omitted UGSS/JDO/2021/dt 09.10.2021ல் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் புதிய பாதாள சாக்கடை திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், தேவையான நிலத்தை ஒப்படைக்கவும், மற்றும் அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை (DPR) தயார் செய்யவும், அதற்காகும் மொத்த செலவினத்தில் **0.50** சதவீதத்தை ஆய்வு கட்டணமாக செலுத்த அனுமதிக்கவும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் Level எடுத்துக்கொள்ளவும், பணி மேற்கொள்ளும்போது **3.50**மீட்டருக்கு அதிகமாக ஆழத்தில் குழாய் பதிக்க நேராமல் பணி மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அ) மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.இ3/12033/2011 | **91)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **2)**தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகர் பிரிவு எண்.**3** க்குட்பட்ட நேதாஜி நகர் **2**வது தெரு மற்றும் கிழக்கு பகுதி **3**வது தெரு மற்றும் **3**வது குறுக்குத் தெருப்பகுதியில் அமைந்துள்ள சாலை மண் சாலையாக உள்ளது. மேலும் மேற்படி சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ள சாலை மண் சாலையாக உள்ளது. மேலும் மேற்படி சாலைகள் மிகவும் சேதமடைந்த பொது போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாகவும், அடிக்கடி விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் சாலைகள் குண்டும், குழியுமாக இருப்பதால், மழைக்காலங்களில் நீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி, மேற்படி பகுதியில், தார்சாலை அமைக்கும் பணி அவசியமாகிறது. மேற்படி பணியினை ரூ. **32.85** லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொது நிதி **2021–22**ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | **92)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
| **1** | வடக்கு மண்டலம்– நேதாஜி நகர் **2**வது தெரு மற்றும் கிழக்கு பகுதி **3**வது தெரு மற்றும் **3**வது குறுக்குத் தெரு– தார் சாலை அமைக்கும் பணி | **32.85** |
| | மொத்தம் | **32.85** |

| | | |
|---|---|---|
| | 3)தூத்துக்குடி மாநகராட்சியில் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் பயன்பாட்டில் இருந்து வரும் தெருவிளக்குகள் அனைத்தும் LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் சேமிப்பினை கொண்டு வர ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ. 14.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு தற்போது வரை 100 சதவிகிதம் LED விளக்குகள் மாற்றம் செய்யப்பட்டும், மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் 99 % பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து செய்து முடிவுறும் தருவாயில் இருந்தும் வருகிறது. இந்நிலையில் 40 வார்டுகள் கொண்ட பழைய மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் LED விளக்குகள் தனியார் நிறுவனத்தாரால் தற்போது வரை இயக்கி பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இதே நேரத்தில Added area 20 வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் தற்காலிக பணியாளர்களைக்கொண்டு மாநகராட்சியால் இயக்கி பராமரிக்கப்பட்டும் வரப்படுகிறது. மேலும் தற்போது 60 வார்டு பகுதிகளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ள LED விளக்குகள் 14782 எண்ணிக்கை தெருவிளக்குகளையும் Conversion செய்த நிறுவனமே LED விளக்கு பொருத்திகளில் உதிரி பாகங்கள் பழுது ஏற்படும்பட்சத்தில் அவற்றை மாற்றிக் கொடுக்க ஒப்பந்தத்தில் ஏற்கனவே உத்திரவாதம் (Warranty) பெறப்பட்டுள்ளதாலும் மேலும் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வரும் 2751 எண்ணிக்கை LED விளக்குகளையும் சேர்த்து ஆக மொத்தம் 17533 எண்ணிக்கை LED விளக்குகளையும் பொது மக்களின் அடிப்படை சேவை நலன் கருதி அடுத்த 5 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி இயக்கி பராமரிக்கும் பணியினை செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது.<br>எனவே தூத்துக்குடி மாநகர பொது மக்கள் நலன் கருதி மேற்சொன்னவாறு 60 வார்டு பகுதிகளிலும் உள்ள LED விளக்குகளையும் அடுத்த 5 ஆண்டுகாலம் இயக்கி பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கு முதல் ஓராண்டு உத்தரவாத காலத்தில் பராமரிக்க ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 61.50 லட்சமும், இரண்டாவது ஓராண்டு காலம் மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பராமரிப்பு தொகையும் சேர்த்து ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 88.20 இலட்சத்திற்கும் இதன் பின்னர் மூன்றாவது ஆண்டு முதல் ஐந்தாவது ஆண்டு பராமரிப்பு காலம் வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டு மதிப்பீட்டு தொகையுடன் 10 சதவிகிதம் Exclation (விலைவாசி ஏற்றத்திற்கு) தொகை சேர்த்து வழங்கவும், இந்த ஐந்து ஆண்டு மொத்த செலவினம் ரூ. 503.15 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 93)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிகளுக்கு உரிய முன்மொழிவுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.271/2021/E3 | |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை மூலமாக தினந்தோறும் சுமாராக 5 உடல்கள் எரியூட்டப்பட்டு தகனம் செய்யப்படுகிறது. எரிவாயு தகன மேடையின் மூலமாக தொடர்ந்து தகனம் செய்யும் பணியினை மேற்கொள்ள மாதந்தோறும் சராசரியாக 12 எரிவாயு உருளைகள் (Gas Cylinders) தேவைப்படும். எனவே மேற்படி எரிவாயு உருளைகளை இம்மாநகராட்சியின் மூலமாக செயல்படுத்தப்படும். அம்மா உணவக பயன்பாடுகளுக்கு விநியோகம் செய்து வரும் அகல்யா கேஸ் ஏஜென்ஸி, தூத்துக்குடி நிறுவனத்தினரிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கும் மற்றும் இக்கொள்முதல் செய்வதற்காகும் செலவினத்தை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம் இ2/4536/2021 | 94) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 5)இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா பிரிவின் மூலம் கொசுப்புழுக்கள் ஒழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை ஒழிக்க பயன்படுத்தப்படும் Temephos (Abate) என்கிற வேதி மருந்து மிகக் குறைந்த அளவு இருப்பு உள்ளதால் Temephos (Abate) மருந்தினை கொள்முதல் செய்வதற்கு Tamil Nadu Medical Services Corporation Ltd.(TNMSC) அனுமதி பெற்ற M/s Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 625/– + 18% GST வீதம் 1000லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 8,00,000/–னை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/04536/2021 | 95)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 6)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் உள்ள அனைத்து தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிகளை கண்காணித்தல், பொது மக்களின் கோரிக்கைகளுக்கேட்ப புதிய தெருவிளக்குகள் அமைத்தல் சம்பந்தமான மின்வாரிய கோப்புகள். பராமரித்தல், புகார்களை நேரில் ஆய்வு செய்து உடன் நடவடிக்கை எடுத்தல், மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் ஏற்படும் பழுது பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், மாதாந்திர மின் கட்டணங்களை கணிணியில் பதிவு செய்து சரிபார்க்க மற்றும் இதர மின் சம்பந்தமான பணிகள் அனைத்தும் செய்ய போதிய | 96) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பணியாளர்கள் இல்லாததாலும் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்படும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருவதாலும், ஏற்கனவே உள்ள இரண்டு களப்பணியாளர்களை மட்டும் வைத்து முழு அளவில் பணிகளை விரைவுபடுத்த இயலாத சூழலில் கீழ்க்கண்ட இரண்டு பணியாட்களை தற்காலிக அடிப்படையில் நகர்புற வாழ்வாதாரமையம் மூலம் பெற்று பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>1) தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல் பட்டயம் பெற்றவர்)<br>– 1 எண்ணம் (Technical Assistant)<br>2) கணிணி ஆப்பரேட்டர் (Computer Operator) - 1 எண்ணம்<br>இவர்களது அனுமதி காலம் 04.10.2021ம் தேதியுடன் முடிவடைவதால் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியதன் அத்தியாவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி 05.10.2021 முதல் 04.10.2022 வரை ஓர் ஆண்டு காலத்திற்கு மேற்படி பணியாட்கள் இருவரையும் 2021–22ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் நகர்புற வாழ்வாதாரமையம் மூலம் பெற்று பயன்படுத்திக்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ 4.10 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். 01576/2018/இ5 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 18–10–2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி